**செய்தி வெளியீடு எண்: 513** **நாள்: 17.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (17.7.2020) ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்டத்தில் 21 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 76 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் காசிபாளையம் மற்றும் கடத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2 கோடியே 71 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள், ஆய்வகம், கழிப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதிகள்;

வேளாண்மைத் துறை சார்பில் 8 கோடியே 20 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கட்டப்பட்டுள்ள 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கட்டப்பட்டுள்ள 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஊரக கிடங்கி, தேசிய மின்னணு வேளாண் சந்தை திட்டத்தின் கீழ் பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகள்;

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் சித்தோடு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகத்திற்கு 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறை கட்டடம் மற்றும் சித்த மருத்துவக் கட்டடம்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 5 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அம்மா பேட்டை ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி கூட்டு குடிநீர் திட்டம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்;

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஓடாநிலையில் 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை கலையரங்க கட்டடம்;

வருவாய்த் துறை சார்பில் 2 கோடியே 84 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நம்பியூர்வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம்;

என மொத்தம் 21 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

மேலும், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த 64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை கட்டடம் கட்டும்பணி;

தோட்டக்கலைத் துறை சார்பில் மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மஞ்சள் வணிக வளாகம் மற்றும் ஆராய்ச்சி மையம்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில் அய்யம்பாளையம், அத்தானி, தவிட்டுபாளையம், ஏரி மற்றும் ஊஞ்சலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் சித்தோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 8 கோடியே 17 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 26 வகுப்பறைகள், ஆய்வகங்கள், சுற்றுச்சுவர், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்;

வருவாய்த் துறை சார்பில் ஈரோடு, சிவகிரி, அவல்பூந்துறை, வாணிப்புத்தூர் மற்றும் பவானி சாகர் ஆகிய இடங்களில் 84 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குறுவட்ட அளவருக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரச்சலூர், ஓடாநிலையில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தீரன் சின்னமலை முழு உருவச்சிலை;

என மொத்தம் 76 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. கதிரவன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**